RECONDITION
HONDA
C.D. 125
இறுதி முறையில்
உள்ளது
பல்க்கனி
ஜிஐன் ஹவ்
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.
போன்; 685

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 சித்திரை 26 ஜமாதுல் ஆகிர் 22 இதழ் 88
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8-5-80

சுவை, சுத்தம்,
சுகாதாரம் நிறைந்த
உல்லாசப் பயணிகளை
கவர்ந்த
சைவ ஓட்டல்
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8095

RECEIVED 1980-5-8 PERIODICALS DIVISION

# ஜனாதிபதி கமிஷனில் ஆஜராக சிறிமா மறுப்பு!

## 'என்னை இழிவுபடுத்தவே கமிஷன் நியமிக்கப்பட்டது"

(நமதுநிருபர் சு. மகாலிங்கசிவம்)

(கொழும்பு)

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்யும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுமுன் தாம் இனி மேல் ஆஜராகப் போவதில்லை என்று முன்னாள் பிரதமரும் அத்தனகல எம். பி.யுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆணைக்குழுமுன் தெரிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா மீதான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை ஆரம்பிக்கும் கமிஷன்முன் ஆஜராகுமாறு அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று அவர் ஆஜரானார்.

நேற்று நடைபெற்ற கமிஷன் விசாரணையைப் பார்க்க பெருந்தொகையானமக்கள் கூடியிருந்தனர். நேற்றுக்காலை 9-20க்கு தமது இரு புதல்விகளுடனும் ஆணைக்குழுமுன் ஆஜராகவந்திருந்த திருமதி பண்டாரநாயக்கா தமது சார்பில் அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

""கமிஷன் விசாரணைகளில் நாம் பங்கு பற்றுவதால் எந்த வித பயனும் ஏற்படாது. போதிய காரணங்கள் இருப்பதால்தான் இதனைக் கூறுகிறேன். இந்தக் கமிஷன் விசாரணைகள் என்னை ஐக்கிய தேசியக் கட்சியினர் இழிவுபடுத்தவே ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும். என்னையும் எனது குடும்பத்தையும் இழிவுபடுத்தவே இந்த அரசுக்கு இவை உதவும்.

""விசாரணைகள் ஆரம்பமானால் மற்றுமொரு காணிவல் தான் இங்கு ஆரம்பமாகும். அதற்கு அரசபத்திரிகைகளும், வானொலியும் பூரண பிரசாரம் செய்யும். இந்த இழிசெயலிலும் அவதூறு செய்யும் கண்காட்சி தொடங்குவதற்குப் நானும் ஒரு தரப்பாக கலந்து கொள்ளவிரும்பவில்லை. நான்

(8-ம் பக்கம் பார்க்க)

## சீமெந்து விலை 67 ரூபா

(கொழும்பு)

உள்ளூரில் தயாரிக்கப்படும் சீமெந்தின் தொழிற்சாலைவிலை 75 ரூபாவிலிருந்து 67 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இப்புதிய விலை நாளையிலிருந்து அமுலுக்கு வருகிறது. (கு)

## இன்று அதிகாலை 3-24 மணிக்கு வெளியான ஆனமடுவ தேர்தல் முடிவு

# ஐ. தே. கட்சி வெற்றி

## பெரும்பான்மை - 1787

திரு. அசோகா வடிவமங்காவ (ஐ. தே க.) - 18552

திரு. சதாதிஸ்ஸ வடிவமங்காவ (சுதந்திரக்கட்சி) - 16,765

திரு. உபதிஸ்ஸ கமநாயக்க (ஜே. வி. பி. சுயேச்சை) - 857

திரு. டி. எம். கருணசேன (சுயேச்சை) - 040

திரு. ஆர். எம். சந்திரா தனசேன (சுயேச்சை) - 022

திரு. ஏ. ரவீந்திர பிரான்சிஸ் (சுயேச்சை) - 079

திரு. எல். எச் செனவிரத்ன (சுயேச்சை) - 273

திரு. என். ஜி. சைமன் (சுயேச்சை) - 081

செல்வி ஜீ. எச். குசுமா நவரத்ன (சுயேச்சை) - 029

அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்!

யாழ். மாவட்ட சாரணியர் மன்றம் வழங்கும்

ரங்கா விவேகானந்தனின்

குச்சுப்புடி நாட்டிய நிகழ்ச்சி

நட்டுவாங்கம்:
குரு வேம்பட்டி சின்ன சத்தியம்
(குச்சுப்புடி கலாநிலையம், சென்னை)

இசை:
குச்சுப்புடி கலாநிலைய இசைக் குழுவினர்

இடம்:
யாழ். வீரசிங்கம் மண்டபம்

காலம்:
11-5-80 ஞாயிறு மாலை 6-30 மணி

பிரவேசக் கட்டணம்: ரூபா 100-00 (இருவருக்கு), 25-00, 10-00

டிக்கட்டுகள் கிடைக்கும் இடங்கள்:

1. குட்லக் ஹொட்டேல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. சித்திராலயா ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3. டில்கா ஹொட்டேல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
4. றிச் கோப்பி பார், நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

5695

பால் சேகரிப்பவரும் விநியோகத்தருக்குமான

பதவிகள்

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் தங்கள் வயது, கல்வி, அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு 15-5-80க்கு முன்னராக விண்ணப்பத்தை அனுப்பியபின் 15-5-80 அன்று காலை 10-00 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவும். விண்ணப்பிப்போர் தங்கள் பாவனைக்கு ஒரு சைக்கிள் வைத்திருத்தல் அவசியமாகும். சம்பளம் நேரில் பேசி முடிவெடுக்கப்படும். கீழ் கண்ட முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
நல்லூர்த் தொகுதி
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,
பாற்பண்ணைத் திட்டம்,
62, வைமன் வீதி, நல்லூர்.

5659

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுள்ளது)

# கேள்வி விளம்பரம்

### 24ஸ்ரீ 9663 அசோக் லேலண்ட் லொறி திரும்பப் புதுப்பித்தல்
(Re Condition

மேற்படி லொறிக்கு தச்சுவேலை, ரிங்கர் வேலை, பெயின்ற் வேலை ஆகியவற்றை பூரணமாகப் புதுப்பித்துத் தருவதற்கு கூறுவிலை கோரப்படுகிறது காரியாலய நேரத்தில் வாகனத்தை நேரில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
1980-05-06.


உ

# அந்தியேட்டி வைபவம்



## திருமதி பாக்கியம் சண்முகதாசன்
(யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்: 12-08-1909 — மறைவு: 08-04-1980

08-04-1980-ல் சிவபதமடைந்தவரும், 84, சிவன் கோவில் வடக்கு வீதியைச் சேர்ந்தவருமான, அமரர் திருமதி சௌபாக்கியம் சண்முகதாசனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08-05-80) காலை கீரிமலையிலும், அன்று பகல் அன்னாரது இல்லத்தில் சபிண்டிகரண கிரியைகளும் நடைபெறும்.

அன்னாரது ஈமைக்கிரியைகளில் கலந்து எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைவருக்கும், எமது இதயம்கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்
சகோதரியும், பிள்ளைகளும்

5687

## கிராமிய நிர்மாணப் பணி
(யாழ்ப்பாணம்)

கிராமிய மக்களின் நிர்மாணப் பணிகளில் கவனம் செலுத்திவருகின்ற "சேர்விஸ் சிவில் இன்ரநாஷனல்" எனும் சர்வதேச ஸ்தாபனம் கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்திய கிராமிய நிர்மாணப் பணிகள் பற்றிய ஏழு நாள் பயிற்சி முகாமில் அறவழிப் போராட்டக் குழுவின் நடவடிக்கைக் குழு உறுப்பினர்கள் பங்குகொண்டனர்.

இலங்கையின் தென்பகுதியில் அதிகமாக இயங்கிவரும் இந்த ஸ்தாபனத்தின் செயற்பாடுகளை வடமாகாணத்திலும் செயல்படச் செய்வதற்காக வேண்டுகோளை அறவழிப் போராட்டக்குழு, ஸ்தாபனத்தின் தலைமைப் பீடத்திற்கு விடுத்துள்ளது. வடபகுதியில் மிகவும் பின்தங்கிய கிராமப் புறங்களில் இவர்களின் உதவி கொண்டு நிர்மாண வேலைத் திட்டங்களைப் புரிய அறவழிப் போராட்டக்குழு முனைந்துள்ளது. (கொ)

## வலி-கிழக்கு தென்பகுதிபலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்
# வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. 1980-05-17ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை 1980-05-14ம் திகதிவரை மேற்படி சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம் கேள்விப்பத்திரங்களை ஒன்று ரூபா 1/-ம் வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் மேற்படி சங்கக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், வலிகிழக்கு தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக் கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிக்கப்படுவதற்கு உரிமை உண்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

நீர்வேலி.
1980-05-05 5688

## ச. ச. நிலைய நிர்வாகிகள்
(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை புனித நீக்கிலஸ் சனசமூக நிலையப் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சு. தோமஸ், உப தலைவர் சு. சற்குணம். செயலாளர் ம. மரியதாஸ், உப செயலாளர் மா. த இளங்கோ, தனாதிகாரி அல்பிறட் திலீப் குமார், விளையாட்டுத் தலைவர் பி கபிரியேற்பிள்ளை

மற்றும் ஒன்பது உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர் (ஜ)

ஃ ஃ ஃ

(உடுப்பிட்டி)

கொற்றாவத்தை மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் க. சிவரத்தினம், உப தலைவர் சி கிருஷ்ணசாமி, செயலாளர் ஐ. பாலகிருஷ்ணன், உப செயலாளர் சி. பொன்னம்பலம், பொருளாளர் மு. ஸ்ரீஸ்கந்தராசா பத்துப் பேரடங்கிய நிர்வாக சபை உறுப்பினர் ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (அ)

ஃ ஃ ஃ

## "ச. ச. நிலையங்கள் கிராமத்துக்கு சேவையாற்றலாம்"
(அரியாலை)

"சன சமூக நிலையங்களின் மூலம் கிராமத்துக்கு அநேக சேவையாற்ற முடியும் பத்திரிகைகளை மட்டும் வாசிப்பதால் மக்களின் அறிவு வளர்ச்சியடையமாட்டாது இயல், இசை, நாடகம் மூலமும் வளர்க்கலாம் இளைஞர்கள் முன்வந்து சன சமூக நிலையங்களின் வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டும்."

இவ்வாறு நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 31வது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையில் திரு. பி. புண்ணியசங்கம் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. த. ரத்னகரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் செயலாளர் திரு இ. ஸ்ரீஸ்கந்தராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

போட்டிகளில் வெற்றிபெற்றோர்களுக்கான பரிசில்களை திருமதி. கதிரவேற்பிள்ளை வழங்கினார்.

இரவு கலை நிகழ்ச்சிகளில் நிலைய சிறுவர் பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், "ஞான சவுந்தரி", "சூழ்ச்சி" என்ற நாடகங்களும் இடம்பெற்றன. (ஈ)

## வரி விளம்பரம்

### தேவை

எமது தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு உருட்டப் பெண் பிள்ளைகள் தேவை. நல்லூரிலிருக்கும் எமது தொழிற்சாலைக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர். சான்றிதழ்கள், நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 5653

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனமொன்றிற்கு நன்கு அனுபவமுள்ள கவுண்டர் கிளார்க் (Counter Clerks) உடன் தேவை. ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு தேர்ச்சியுடையவராகவும் A/L பரீட்சையில் நான்கு பாடம் சித்தியடைந்தவராகவும், வயது 35க்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அனுபவத்திற்கேற்ப சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5690 C/o. ஈழநாடு யாழ்ப்பாணம். 5690

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனமொன்றிற்கு தமிழிலும், ஆங்கிலத்திலும கணக்கு எழுதுவதில் நன்கு அனுபவமுடைய கணக்காளர் ஒருவர் உடன் தேவை. Book-Keeping, Accounts Exam சித்தயடைந்தவராகவும் மூன்று அனுபவமுடையவராகவும், வயது 40க்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் மாதம் ஒன்றிற்கு ரூபா 500/-ம் வருடம் ஒன்றிற்கு ரூபா 25/- சம்பள உயர்வும் கொடுக்கப்படும், உடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 5692, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5692

### விற்பனைக்கு

எம்மிடம் வொக்ஸ்வாகன் டிலிவரி வான் 33 ஸ்ரீ 2164 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் காலை 10 மணி முதல் 1 மணிவரை நேரில் பார்வையிடலாம் நியூரோன் எலக்ரிக்கல்ஸ், 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி 7016.) 5691

## வள்ளுவர் விழா பேச்சுப் போட்டி
(நெல்லியடி)

யாழ். செயலக கலாச்சார மன்றம் நடாத்தும் திருவள்ளுவர் விழா பேச்சுப் போட்டிகள் இம்மாதம் 9ம் திகதி அச்சுவேலி சென். திரேசா கல்லூரியில் நடைபெறவுள்ளது. வலைறைய தினம் கோப்பாய், உடுப்பிட்டி பருத்தித்துறை சங்கானை வட்டாரப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறும்.


ஏமாற்றத்தை தவிர்ப்பதற்கு முந்துங்கள்!
புத்தம் புதிய

# சுஸூக்கி - யமாஹா
SUZUKI — G P. - 100 K - 125
YAMAHA — R D 125, R D 200, R D 250

பிஞன்ஸ் வசதிகளும் உண்டு

# த பிஞன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249 C, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7180



## பதவிகள் வெற்றிடம்
"மத்திய கிழக்கில் நிர்மாண வேலைகளி லீடுபட்டுள்ள (CONSTRUCTION WORK) கம்பனியொன்றுக்கு நன்கு அனுபவம் வாய்ந்த

எலெக்றிசன்ஸ் (Electricians)
பைப்பூட்டுபவர்கள் (Pipe Fitters) தேவை

விபரங்கட்கு:
காலை 9 மணி முதல் பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 111-ம் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நேர்முகப் பரீட்சை: 11-5-1980 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி விலாசத்தில்.

குறிப்பு:
முன்பு விண்ணப்பித்தவர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

5686 'காதம்பரிஸ்'

Labour Licence No. 270


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

கடவுளின் சங்கல்பம் அல்லது இச்சையே இயற்கை நியதிகளாக வடிவெடுக்கின்றது.

- சுவாமி சிவானந்தர்

## மக்கள் கருத்து

### வல்வை ஒற்றுமையாளர் மூவர்கவனத்திற்கு

அமிர் - நவம் எழுத்துப் போட்டியின் நோக்கம், தரம் அறிந்து முற்றுப்புள்ளி வைத்தல் நலம் என்று தாங்கள் தொனி எழுப்பியுள்ளதை "ஈழநாடு" (5-5-80) இதழில் கண்டு முடிந்தது நல்ல முடிவே.

அதே நேரத்தில் "தமிழின அரசியல் நெருக்கடித்தாக்க வேண்டாம்" என்று மற்றொரு தினசரியில் செய்தியும் அதே தினம் வெளிவந்துள்ளது.

ரணத்தை மூடிமறைத்து சுகதேகியாகத் தமிழினம் வாழ முடியாது. சீழ் அகற்றப்பட வேண்டும். ஆனால் தற்சமயம் நடப்பதுபோல் பகிரங்கமாக அல்ல; அறிஞர் மத்தியில். 69-70 வருட அரசியல் நன்கு தெரிந்த பெரியவர்கள் - தலைவர்கள் 3-5 நீதிபதிகள் முன், 13-15 அரசியல் ஈடுபாடுள்ள பிரமுகர்களை ஜூரர்களாகக் கொண்டு ஏற்றுக்கொள்ளப் பட்ட எல்லாக்கட்சிகளும் தலா 3-5பேரை அனுப்பி, ஆதாரங்கள் காட்டி தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவேண்டும். தமிழரசு - கூட்டணிக்கு 15 அல்லது 20 பேர் அனுமதிக்கப்படலாம்.

எம்மினம் கீழ் நிலைப்பட்டதற்குக் காரணம் யாது என்பதை ஆராய்வது அவசியம்.

வல்வை ஒற்றுமை முயற்சியாளர் மூவரும் இதில் கூடுதல் பங்கெடுத்து தமிழினத்தை வாழவைக்கவேண்டும். எம் தமிழினம் இலங்கையில் நெடிது வாழ்வதா - அல்லது காலகதியில் மக்கிமடிந்து மாழ்வதா என்ற கேள்விக்கு உடனடியாக - தீர்க்கமான பதில் கண்டேயாகவேண்டும். தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள். காப்பாற்ற முடியாமல் நட்டாற்றில் மக்களைத் தவிக்க அழியவிட்டார்கள் என்ற இழிச்சொல் வராதபடி பொறுப்பேற்று, எனது கருத்தை ஏற்று, செயற்படமுன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் தெரிந்த பெரியவர்களும், தலைவர்களும் "தலைமைப்போட்டி" இது நடந்த விஷயம் வெளிவரவேண்டும்

ஜே. ரி. நவம்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### 'நவம்' நாடு திரும்புகிறார்

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் இடம்பெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவென வெளிநாடு சென்ற சாவகச்சேரி எம். பி. வி. என். நவரத்தினம் இவ்வாரம் தாயகம் திரும்புகிறார்.

இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்கும் இவர் விஜயம் செய்து, பல பணிகளில் ஈடுபட்டிருந்தார். இச்சுற்று விஜயத்தின்போது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பல வெளிநாட்டு முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தார். (கொ)

# 4-வது உணவு முத்திரை வழங்கும் வேலைகள்

## 10-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நான்காவது உணவு முத்திரை வழங்கும் வேலைகள் இம்மாதம் 10-ந் திகதி ஆரம்பமாகிறது.

3-வது உணவு முத்திரைத் திட்டம் இம்மாத இறுதியுடன் பூர்த்தியாகிறது.

இம்மாதம் 10-ம் திகதி முதல் 20-ந் திகதிவரை உதவி அரசாங்க அதிபர்கள், பட்டியலைத் தயாரித்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைப்பார்கள்.

25-ம் திகதி முதல் 31-ம் திகதிவரை சங்கங்களில் முத்திரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

ஜூலை மாதம் 1-ம் திகதி வரை 4-வது உணவு முத்திரை வழங்கப்படும். (க)

## சாதி அமைப்புக்கு எதிராக கருத்தரங்குகள்

### அறவழிக்குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், பாடசாலைகளிலும் சாதி அமைப்புக்கு எதிரான அணுகுமுறை பற்றிய கருத்தரங்குகளை நடாத்துவதற்கு அறவழிப் போராட்டக்குழுவினர் தீர்மானித்துள்ளனர் என்று அதன் செயலாளர் திரு. ஜீவதாசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. ஜீவதாசன் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"வடபகுதில் புரையோடிப் போயிருக்கும் சாதி அமைப்புக்கு எதிராக அறவழிப் போராட்டக்குழு வடபகுதியிலுள்ள, பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, உயர்தரக் கல்லூரிகள் மற்றும் சில தனியார் கல்வி நிறுவனங்களிலும் இம்மாதம் 12-ம் திகதி தொடக்கம் "சாதியமைப்புக்கு எதிரான அணுகுமுறைக் கருத்தரங்கு" என்ற தலைப்பில் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடாத்தவுள்ளது.

"இக்கருத்தரங்குகளின் போது அமெரிக்க வாழ்வு நிலையத்தினைச் சேர்ந்த செல்வி பெகி மேனி, திருவாளர்கள் ஜாக், ஜோன், பீற்றர் ஆகியோர் பங்கு கொண்டு பல விரிவுரைகளை நடாத்தவுள்ளனர்.

"ஒருமாத காலம் அமெரிக்க வாழ்வு நிலையத்தினைச் சேர்ந்த பிரதிநிதிகள் வடபகுதியில் தங்கியிருந்து பணிபுரிவதற்கான சகல ஏற்பாடுகளையும் அறவழிப் போராட்டக்குழு செய்து வருகின்றது. இத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வடமாநிலக் கல்வி அதிபதியின் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அறவழிப் போராட்டக்குழு கோரியுள்ளது. வடபகுதியில் உள்ள சகல தொகுதிகளிலும் இக்கருத்தரங்கு 1 மாதம் இடம்பெறும்" (கொ)

## "மாணவர்களுக்கு சமய அறிவு அவசியம்"

(அரியாலை)

"இளஞ் சிறுவர்களுக்கு சமய அறிவு மிக அவசியமாகும். சமய அறிவை மாணவர்களுக்கு முறையாகப் படிப்பிக்காத காரணத்தினால் இவர்கள் வழிதவறிப் போகிறார்கள். இம்மார்க்க போதனையை மாணவர்களுக்கு ஒழுங்கான முறையில் படிப்பிப்பதற்காகவே வேதாகம விதிமுறை வகுப்புக்கள் இலங்கையில் பல பாகங்களிலும் நடாத்தப்படுகின்றன. இவ் வகுப்புகளில் சேர்ந்து கற்கும் மாணவர்கள் போதனைகளில் மட்டுமல்ல சாதனைகளாலும் தமது அறிவை விருத்தியாக்குகின்றனர்."

இவ்வாறு நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற வேதாகம விதிமுறை வகுப்பு மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் திரு. அல்பிறட் தேவதாசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் சாம் டீ. ஹோர்சிங்கன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திருமதி தேவதாசன் பரிசில்களை வழங்கினார்.

பரிசளிப்பு விழாவின் பின்னர் மாணவர்களின் வேதாகம விதிமுறை வகுப்பு பொருட்காட்சி இடம்பெற்றது. (ஈ)

## நாடும் நடப்பும்

இலங்கைத் தயாரிப்பான 'புதிய காற்று' திரைப்படம் வெளிவந்த நாட்களில் அதன் தயாரிப்பாளரும் கதாநாயகனுமான வி. பி. கணேசன் இலங்கை வானொலியின் செயல் ஒன்று பற்றி பத்திரிகையாளர்களிடம் அடிக்கடி கண்டித்து வந்தார்.

"ஒரு திரைப்படம் உள்ளூர் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் போது அப்படத்தில் வரும் பாடல்கள் சினிமா விளம்பர நேரம் தவிர்ந்த வேளைகளில் ஒலிபரப்பப்படமாட்டாது என்று கூறி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 'புதிய காற்று' பாடல்களை ஒலிபரப்பாது ஒதுக்கிவைத்துள்ளது.

"உள்ளூர்த் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் அத்திரைப்படத்தின் பாடல்களை ஒலிபரப்புவது விளம்பரமானால் - தென்இந்தியாவில் தயாரிப்பில் இருக்கும் இனிமேல் இலங்கைக்கு வரவிருக்கும் படங்களின் பாடல்களை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்புவது மட்டும் அப்படங்களுக்குக் கொடுக்கும் விளம்பரம் ஆகிவிடாதா?

"தவழும் குழந்தையாக இருக்கும் இலங்கைத் திரைப்படத்துறையை எழுந்து நடக்கச் செய்ய இலங்கை அரசும் கலைஞர்களும் மேற்கொள்ளும் முயற்சிகளை தனது நடவடிக்கைகள் மூலம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் குழிதோண்டிப் புதைக்கிறது'.

இதுதான் திரு. கணேசன் கூறிய கண்டனம்.

இது இவ்வாறிருக்க தற்போது உள்ளூரில் ஓடிக்கொண்டிருக்கும் இந்தியத் திரைப்படங்களில் வரும் பாடல்கள் வானொலியில் ஒலிபரப்பப்படுகிறது.

கூட்டுத்தாபனம் தனது கொள்கையை மாற்றி விட்டதா? அன்றி திரு. கணேசனின் குற்றச்சாட்டுக்கள் தவறானதா? இந்தியப்படங்களுக்கு ஒரு நீதி இலங்கைப்படங்களுக்கு இன்னொரு நீதியா? என்ற கேள்விகள் எழுவது நியாயமே!

ஃ ஃ

சென்ற செவ்வாய்க்கிழமை உறுப்பினர்களுக்கு மட்டுமான திரைப்படக்காட்சியொன்று யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற போது அனுமதியின்றி நுழைய முயன்ற நான்கு இளைஞர்கள் குழப்பம் விளைவித்தனராம். முன்னர் இரு தடவைகளும் இவ்வாறான சம்பவம் நடைபெற்றுள்ளதெனவும் ஒருதடவை சைக்கிள் வண்டிகளின் காற்றுத்திறந்து விடப்பட்டு மோட்டார் காரின் 'விண்ட்ஸ்கிறீன்' வைப்பரும் முறிக்கப்பட்டிருந்ததெனவும் இந்த இளைஞர்களை அடையாளம் காட்டமுடியுமெனவும் நிர்வாகிகளால் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சில இளைஞர்களின் செயல்கள் மிக மோசமாக இருப்பதாகவும் கொழும்பு மற்றும் பிறஇடங்களில் உள்ள இளைஞர்கள் நல்லமுறையில் நடந்து கொள்கிறார்களென்றும் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஒரு அம்மையார் மிகவேதனையுடன் தெரிவித்தார்.

— ஊர்சுற்றி

## வற்றாப்பளைப் பொங்கலுக்கு விசேஷ பஸ் சேவை

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கல் தினமான இம்மாதம் 26ந் திகதி திங்கட்கிழமை அடியார்களின் நலன் கருதி விசேட பஸ் சேவைகள் நடாத்தப்படவுள்ளன. முல்லைத்தீவுப் பிராந்திய டிப்போவும் மற்றும் வடபகுதியில் உள்ள ஏனைய டிப்போக்களும் 25ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பொங்கல் தினமான திங்கட்கிழமை முழு நாளும் கோவில்வரை பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

முல்லைத்தீவு உட்பட யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, வவுனியா முதலான பஸ் டிப்போக்கள் விசேட பஸ்சேவைகளை நடத்தும்.

ரயில் மூலம் ஆலயத்திற்கு வருகைதரவுள்ள அடியார்களின் நலன்கருதி முல்லைத்தீவு பஸ் டிப்போவினால் மாங்குளம் ரயில் நிலையத்திலிருந்து ஆலயம் வரை விசேட பஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (கோ-அ)

## வழிகாட்டி நூல்கள்

(நெல்லியடி)

வடபகுதி ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல்கள் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி, பருத்தித்துறை சாவகச்சேரி, பரந்தன் ஆகிய கல்வி வட்டாரங்களில் இவ்வழிகாட்டிகளை அவ்வப்பகுதி வட்டாரக் கல்லூரிகள் பெற்றுக் கொண்டார்கள். கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா, தமது வட்டார ஆசிரியர்களுக்கான நூல்களை கல்வியதிகாரிகளிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

## பாதுகாப்புக் குழு

(நெல்லியடி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கன்பொல்லை நவீன கிராமத்தில் திருட்டுக்களைத் தவிர்ப்பதற்காக பொலிஸ்-பொதுமக்கள் பாதுகாப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழு அமைப்பின்போது உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறைப் பொலிஸ் அதிபர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

## கோப்பாயில் 25 புதிய வீதிகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிராம சபை எல்லைக்குள் புதிதாக 25 வீதிகள் அமைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் கிராம சபை விசேட ஆணையாளர் திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தன் தெரிவித்தார்.

கோப்பாய்க் கிராம சபைப் பகுதியில் உள்ள சகல இடங்களுக்கும் யூலை மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

3வது உப மின்நிலையம் ஒன்று கோப்பாய் மத்தியில் அமைக்கப்படவிருப்பதாகவும், மின்சாரத்திற்கு 3லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## யாழ். மாவட்ட சமாஜம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜ நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ப. வதிரிதம்பி, செயலாளர் சி வரதராசா, பொருளாளர் ச துரைராசா செயற்குழு உறுப்பினர்களாக திலுள்ள 12 உதவி யாழ். மாவட்டத் அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் தலா இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ)

## பனைஓலை பயிற்சி வகுப்பு

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தையில் பனை ஓலைப் பயிற்சிக் குட்டைபனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு என் கனகசூரியர் ஆரம்பித்துவைத்தார்.

இவ்ஆரம்பவைபவத்தில் சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. என் இரத்தினசிங்கம், திரு. சி கனகநாயகம், திரு. வேலாயுதபிள்ளை, திரு. நடராசா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (வெ)

## மானிப்பாய் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி திருத்தவேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

வாகனங்கள் வேறுபாதைகளால் திசைதிருப்பிவிடப்படுகின்றன.

பெருந்தெருக்கள் திணைக்களம் யாழ் கிளையினர் இந் வீதி வேலையை மேற்கொண்டுள்ளனர் சுமார் ... இற்கு இவ்வீதி வேலை நடைபெறவிருக்கிறது (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திருக்கேதீஸ்வர உற்சவம்:

# விசேட பஸ் சேவைகள்; வீதிகளும் திருத்தப்படும்!

## யாழ். செயலக மாநாட்டில் முடிவு

(யாழ்ப்பாணம்)
திருக்கேதீஸ்வர விசேட உற்சவத்தை யொட்டி, சேரதீவு - யாழ்ப்பாணத்திருந்து 8 பஸ்களையும் சங்குப்பிட்டி மன்னாருக்கு 16 பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துவதென்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடந்த திருக்கேதீஸ்வர உற்சவம் சம்பந்தமான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நேற்றுக் காலை நடந்த மாநாட்டில் பொலிஸ் அதிகாரிகள், வடபிராந்திய போக்குவரத்துச்சபை பிரதிநிதிகள், பூநகரி உதவிஅரசாங்க அதிபர் திரு. வைத்திலிங்கம் பொறியியலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மாதம் 17ந் திகதிமுதல் 30ந் திகதிவரை நடைபெற விருக்கும், திருக்கேதீஸ்வர விசேட உற்சவத்திற்கு வட பகுதியிலிருந்து பல்லாயிரக் கணக்கானோர் செல்வார்களென்று எதிர்பார்க்கப்படுவதால் அதற்கான ஏற்பாடுகள் பற்றி இம் மாநாட்டில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவுசெய்யப்பட்டது.

பரந்தன் பூநகரி வீதியையும் சங்குப்பிட்டி பூநகரி வீதியையும் திருத்துவதென்று இம் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது.

கேரதீவு, சங்குப்பிட்டி துறைமுகங்களில் உதவி அரசாங்க அதிபர், பொறியியலாளர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினரும் குடிநீர் வசதிகளை செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

உற்சவகாலங்களில் பாதை சேவையை தாமதிக்காமல் நடத்த ஏற்பாடுசெய்வதென்றும் யாத்திரிகர்களின் வசதிக்காக ஏற்கனவேயுள்ள 2 படகுகளுடன் மேலதிகமாக ஒரு படகையும் சேவையில் ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

திருவிழாக்காலம் வரை, சங்குப்பிட்டி, கேரதீவு துறைமுகங்களில், பொலிசார் மூவாயிட்டு ரேடியோ தொடர்பு சேவை நடத்தி கடமைபுரிய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாத்திரிகர்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (க)



## அரங்கேற்றம்

செல்வி மேரிஸ்டெல்லா செபஸ்தியாம்பிள்ளை, செல்வி மேரிபடோனு செபஸ்தியாம்பிள்ளை சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

வண. பிதா உயர்திரு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் க. கைலாசபதி தம்பதிகள் உயர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

யாழ். எம் பி திரு. வே. யோகேஸ்வரன் தம்பதிகள், யாழ். நகரமேயர் ஆர். விசுவநாதன் தம்பதிகள், டாக்டர் ஏபிரகாம் தம்பதிகளும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

## "தொழிலாளர் நலனுக்காக தன்னை அர்ப்பணிக்கும் தலைவர்"

### கல்விப் பணிப்பாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)
"தொழிலாளர் நலன்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்து வேலைசெய்யும் ஒரு தொழிற்சங்கத் தலைவர் திரு. க. நவரத்தினம்தான்"

அரசாங்கப் பொதுச்சேவைத் தொழிற்சங்க யாழ் கிளையின் தலைவரும், தொழிற்சங்க சம்மேளனத்தின் உப தலைவருமான திரு. க. நவரத்தினம் தொழிற்சங்கப் பயிற்சிக்காக மாஸ்கோ செல்வதைப் பாராட்டி நடைபெற்ற தேநீர் விருந்துபசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொழிற்சங்க சம்மேளன வடபிரதேசத் தலைவர் திரு. அ. யோசேப் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டுக் கூட்டம் யாழ். பெரியதபாற்கந்தோர் ஊழியர் இளைப்பாற்று மண்டபத்தில் இடம் பெற்றது.

திரு. நவரத்தினம், உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் அழைப்பையேற்று ஆறு வாரகாலம் தொழிற்சங்கப் பயிற்சிக்காக மாஸ்கோ செல்லவிருக்கிறார்.

லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த திரு எஸ். விஜயானந்தன் பேசுகையில் "நமது நாட்டு முதலாளிகள் அனுபவிப்பதைப் போன்ற வசதிகளைச் சோவியத் யூனியனிலுள்ள தொழிலாளர்கள் அனுபவிக்கிறார்கள்" எனக் கூறினார்.

அரசாங்கப் பொதுச்சேவைத் தொழிற்சங்க யாழ். கல்விக் கிளையின் செயலாளர் திரு. செ. வீரசிங்கம் பேசுகையில், "தேசிய ரீதியாக உள்ள தொழிற்சங்கங்களில் ஐக்கியப்பட்டுச் சேவையாற்றும் திரு. நவரத்தினம், இன்று சர்வதேச ரீதியிலான தொழிலாளி வர்க்கத்தின் அழைப்பை ஏற்று மாஸ்கோ செல்வதைத் தொழிலாளி வர்க்கம் மிகவும் மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றது" என்றார்.

திரு க. நவரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசுகையில், "இன ரீதியாகவும், மொழி ரீதியாகவும் தொழிலாளி வர்க்கத்தைக் கூறுபோடும் இன்றைய நிலையில், தேசியத் தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து வேலைசெய்யும் நாங்கள், சர்வதேச ரீதியில் மதிக்கப்படுவது ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல" என்றார்.

# மோசடி வழக்கில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பு குருவளி அகதிகளுக்கு வழங்கப்பட்ட மா மோசடி வழக்கில், எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் ரி. போகநாதன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் மட்டக்களப்பைச் சேர்ந்த தந்தப்பு கணபதி பிள்ளை, மட்டக்களப்பு குருவளி அகதிகளுக்கு வழங்கிய மாவை மோசடிசெய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி சபாரத்தினம் நீதிமன்ற சட்ட ஆதிக்கம்பற்றிய பூர்வாங்க ஆட்சேபம் ஒன்றைக் கிளப்பினார்.

யாழ்ப்பாணத்தில் மா எதிரியினால் மோசடிசெய்யப்படவில்லையென்றும் மோசடி செய்யப்பட்டதாகக் கூறப்படும் மா, எதிரியினால் யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளப்படவில்லையென்றும் ஆதலால் இந் நீதிமன்றத்திற்கு, இவ் வழக்கை விசாரணை செய்ய சட்ட ஆதிக்கமில்லை யென்றும் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் வாதாடினார்.

ஆட்சேபணையை ஏற்றுக் கொண்ட நீதவான் எதிரியை விடுதலைசெய்தார். யாழ்ப்பாணப் பொலிசார் வழக்கை நடத்தினர். (அ)

## அரசாங்க எழுதுவினைஞர்சங்க

### யாழ்.கிளை உத்தியோகஸ்தர்கள் ஜூன் 6-ல் தெரிவாவர்

(யாழ்ப்பாணம்)
அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்ட அடுத்த மாதம் 6 ம் தேதி மாலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தில், புதிய தலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், உதவிப் பொருளாளர், 2 உப தலைவர்கள், 14 நிர்வாகக்குழு அங்கத்தவர்கள், 4 பொதுச்சபை உறுப்பினர்களை யாழ். மாவட்டத்தில் உள்ள சுமார் 400 உறுப்பினர்கள் தெரிவு செய்வார்கள்.

இப்பதவிகளுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 21 ம் தேதிக்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 26 ம் தேதி கொழும்பில் நடைபெறவிருக்கும் பேராளர் மாநாட்டிற்கும், பேராளர்கள் தெரிவு செய்யப்படுவர். இம் மாதம் 23 ம் தேதிக்குமுன் பிரேரணைகள் கிளைச் செயலாளரிடம் கையளிக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது -அ)

## நாளை திறக்கப்படும் ...கோவில்

(யாழ்ப்பாணம்)
தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் வேண்டுகோளை ஏற்று கல்விளங்கு புதுச் செம்மணி வடலிவெளி கந்தசுவாமி கோவில் இம் மாதம் 9 ம் திகதி சகல மக்களின் வழிபாட்டுக்கெனத் திறக்கப்படவுள்ளது.

இத்தேவஸ்தான தர்மகர்த்தா திருமதி டாக்டர் சுப்பிரமணியத்துடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க கோப்பாய் தொகுதி பிரதிநிதிகளான திரு ஆ. தில்லையம்பலமும் திரு எஸ். செல்லையாவும் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக நாளை வெள்ளிக்கிழமை இவ் வாலயப்பிரவேசத்திற்கான நடவடிக்கைகளை அவ்வூர் மக்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

# 13-வது மாடியிலிருந்து விழுந்த குழந்தை!

## கைகளில் ஏந்தி காப்பாற்றினாள் தாய்!!

சியோல், மே, 7

13 வது மாடியிலிருந்து தவறிக்கீழே விழுந்த 2 வயதுக் குழந்தையைத் தெய்வம் போல வந்து கைகளில் ஏந்தி காப்பாற்றினார் அக்குழந்தையின் தாயார். இச்சம்பவம் சியோலில் நடைபெற்றது

மாடிவீடொன்றில் குடியிருக்கும் திருமதி கிம்எம் யுங்சுன் என்ற பெண்மணியின் குழந்தை ... ஜன்னல் வழியாக நிலத்தில் எறிந்துவிட்டது அந்நேரம் ... கீழே நின்ற தாய் ... பார்த்திருக்கிறார். மேலே தமது வீட்டின் ... பிடியில் அந்த ... குழந்தை கீழே விழ இருந்ததைக் கண்டு அத்தாய் கூக்குரலிட்டபடியே அக்குழந்தைக்குக் கீழே வந்து கையை ஏந்திய படி நிற்கவும் குழந்தை கைகளில் விழவும் சரியாக இருந்தது.

குழந்தை கைகளில் விழுந்ததில் ஏற்பட்ட அதிர்ச்சியில் தாயும் குழந்தையும் மயங்கி விழுந்தனர்.

### 70 தையல்கள்

இருவரும் உயிர்தப்பிய போதிலும் குழந்தையின் முகத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டு 70 தையல்கள் போடப்பட்டன தாயின் இடது ...

# மீன் உணவுத் தொழிற்சாலை உற்பத்தி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சுமார் ஏழு லட்ச ரூபா செலவில், மண்டதீவில் நிறுவிய மீன் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை, தனது உற்பத்தியை பரீட்சார்த்தமாக ஆரம்பித்துள்ளது

தற்போது இத்தொழிற்சாலையில், நாளொன்றுக்கு 10,000 இறாத்தல் மீன், தயாரிக்கப்படுகின்றது தொழிற்சாலை தனது உற்பத்தியை முழுஅளவில் ஆரம்பித்ததும், தொழிற்சாலைக்கு 26 000 இறாத்தல் மீன் தேவைப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஜெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மருத்துவ மனைகள் 16-ம் திகதி விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தனியார் மருத்துவ மனைகள் பற்றி விசாரணை செய்ய அரசினால் நியமிக்கப்பட்ட குழு, இம்மாதம் 16-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறது.

இக்குழு இம்மாதம் 16ம், 17, 18-ம் திகதிகளில், இங்குள்ள தனியார் வைத்திய சாலைகளுக்கு சென்று பார்வையிடும். (க)

## பொல்காவலை ரயில்நிலையத்தில்

# கொள்ளை முயற்சியின்போது, அதிர்ச்சியடைந்த மாது மரணம்!

(மன்னார்)

தாயகம் செல்வதற்கென உறவினர்களுடன் ரயிலில் பிரயாணம் செய்த வயோதிப மாது ஒருவர், வேறொரு பெண்ணின் தங்க நகைகளைத் திருடர்கள் கொள்ளையடிக்கமுயற்சித்ததைக்கண்டு அதிர்ச்சியடைந்து பின் மரணமான சம்பவம் மன்னாரில் நிகழ்ந்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன் தாயகம் செல்லவென உறவினர்களுடன் நவலப்பிட்டியைச் சேர்ந்த பெருமாயி வயது 68 என்ற வயோதிபமாது கொழும்பு தலைமன்னார் ரயிலில் வந்ததையும் ரயில் வண்டி பொல்காவல நிலையத்தில் தரித்து நின்றபோது அத்தருணத்தைப் பயன்படுத்திய திருடர்கள் பெருமாயி என்ற வயோதிபப் பெண்ணின் கழுத்தில் உள்ள தங்க நகைகளைக் கொள்ளையடிக்க முயற்சித்ததையும் இச்சம்பவத்தின்போது ஏற்பட்ட அதிர்ச்சியில் மயக்கமடைந்த பெருமாயி என்ற வயோதிப மாது மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்தியையும் வாசகர்கள் அறிந்ததே.

மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெருமாயி ஒருமாத காலம் சிகிச்சை பெற்று வந்தார். பின் அவர் மன்னார் வைத்தியசாலையில் மரணமானார்.

பெருமாயி மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது இவருடன் தாயகம் செல்ல வந்திருந்த உறவினர்கள் தலைமன்னார் சர்வோதய இல்லத்தில் தங்கியிருந்தனர்.

மரணமடைந்த பெருமாயியின் மரணச் சடங்கின ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட தொழில் இணைக்கள அதிகாரி திரு ஜோசப் சர்க்காரியாஸ் மேற்கொண்டிருந்தார்.

பெருமாயியின் மரணச்சடங்குகள் முடிந்ததும், இவருடன் தாயகம் செல்லவென வந்தவர்கள் துயரத்துடன் தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக தாயகம் சென்றனர். (ஈ)

# “எனது கணவர் மது அருந்தும் இடத்திலேயே கிடந்துவிடுவார்”

## அச்சுவேலிக் கொலைவழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

(மாவிட்டபுரம்)

“எனது கணவர் அளவுக்கதிகமாக மது அருந்தும் பழக்கமுடையவர். சில சமயங்களில் மது அருந்திவிட்டு அங்கேயே இடத்தும் விடுவார். வீட்டுக்கு வருவதில்லை. 8-ம் எதிரியின் வீட்டில் மட்டுமல்ல வேறு இடங்களிலும் அவர் மது அருந்துவார். அவரை 'கோப்பறேசன் துரை' என்று ஊரில் அழைப்பதும் உண்டு”

இவ்வாறு அச்சுவேலிக் கொலை வழக்கில் சாட்சியமளித்த கொலையுண்டவரின் மனைவி துரைராஜா பூமணி தெரிவித்தனர்.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த அப்பையா துரைராஜா என்ற விவசாயி மர்ம உறுப்பு வெட்டியுண்ட நிலையில் இணைவெருந்தில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் குட்டியன் இராஜதுரை, ஜோசெப், நடராசா குட்டியன் இரத்தினம், முத்தன் கார்த்திகேசு, சிவலைதுரைச்சாமி, முத்தன் வீமன் கிட்டினன் தாராசிங்கம், இன்னட்டி சீனியன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறை பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

இவ்வழக்கு முதலாவது தடவையாக விசாரணைக்கெடுக்கப்பட்டபோது கொலையுண்டவரின் மனைவி பூமணி மேலும் தாது சாட்சியத்தில் கூறியதாவது:

“கொலையுண்டவரை 8 வருடங்களுக்கு முன் நான் மணம் செய்தேன். அவர் ஒரு கமக்காரர் எமக்கு இரு பிள்ளைகள் உண்டு சம்பவம் நடைபெறுவதற்கு 11 மாதங்களுக்கு முன் தோட்டச் செலவுகளுக்குப் பணம் தேவைப்பட்டதால் எனது 8 பவுண் நிறையுடைய தாலிகொடியை எனது கணவர் வாங்கிச்சென்று 8-ம் எதிரியிடம் அடைவு வைத்துப் பணம் வாங்கியிருந்தார். பின்னர் சம்பவ தினமான 20—11—79-ல் 6800 ரூபா பணத்துடன் தாலிக்கொடியை அடைவு மீட்பதற்காக காலை 9 30 மணிக்கு 8ம் எதிரியின் வீட்டுக்கு அவர் சென்றார்.” பின் திரும்பி வரவில்லை. சில சமயங்களில் வீடு திரும்புவதில்லையாதலால் நான் அவரைத் தேடவில்லை. மறுநாள் பத்தமேனி வைரவர் கோவிலுக்குப் பக்கத்துக் கிணற்றில் எனது கணவரது சடலம் கிடப்பதாக அறிந்து அங்கு சென்று பார்த்தேன் அங்கு சடலம் கிடந்தது. 5-ம் எதிரியும், 8-ம் எதிரியும் எனது கணவருடன் சிநேகிதமானவர்கள். 8-ம் எதிரி வீட்டுக்கு அவர் மது அருந்தச் செல்வார். சில சமயங்களில் அங்கேயே தங்கி விடுவார்” என்றார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

சட். சம்பவதினம் 6000 ரூபா பணத்துடன் அவர் 8-ம் எதிரியின் வீட்டுக்குத்தான் போனாரா அல்லது வேறு எங்காவது போயிருப்பாரா என்பதைக் கூறமுடியுமா?

சாட்சி: 8-ம் எதிரி வீட்டுக்குப் போவதாகக் கூறினார். ஆனால் எங்குபோனாரோ தெரியாது

சட்: சம்பவம் நடைபெறும்வரை 5-ம், 8-ம் எதிரிகள் உமது கணவருடன் சிநேகிதமாக இருந்தார்கள்தானே.

சாட்சி: ஆம்

சட்: 8ம் எதிரியின் வீட்டில் மட்டும்மல்ல வேறு இடங்களிலும் கணவர் மது அருந்துவார். அங்கு தங்கியும் விடுவார்.

சாட்சி: ஆம்.

இதனையடுத்து தம்பிப்பிள்ளை பாலச்சந்திரன், முத்துசாமிக் குருக்கள் சுப்பிரமணியசர்மா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

பின்னர் கொலையுண்டவரின் சகோதரர் சுப்பையா சிவராசா சாட்சியமளிக்கையில், சம்பவ தினம் கொலையுண்டவர் 5ம், 6ம் எதிரிகளுடன் அச்சுவேலியில் கதைத்துக்கொண்டு நின்றதைத் தாம் கண்டதாகக் கூறினார்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள் ரி. தம்பிரத்தினமும் எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி கமலா தில்லையர், செல்வி மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும் ஆஜராகினர்

இவ்வழக்கில் வழக்காளி தரப்பில் முன்னர் ஆஜரான சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் வழக்கு விசாரணை நடைபெறுகையில் தாம் இவ்வழக்கில் ஆஜராகாமல் விலகுவதாக நீதிபதியிடம் தெரிவித்து, அதனைப் பதிவேட்டில் பதியுமாறும் கேட்டுக்கொண்டார்.

நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் அதனைப் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டதையடுத்து, அவர் பின்னர் அவ்வழக்கில் ஆஜராவதை நிறுத்திக்கொண்டார்.

# “அங்கிள் என்னை மன்னியுங்கள் எனது மரணத்திற்கு நானேபொறுப்பு”

## தற்கொலை செய்த நடிகை ஷோபாவின் கடிதத்தில் இவ்வாறு கூறப்பட்டிருந்தது

சென்னை மே 7

அங்கிள் என்னை மன்னியுங்கள் என்னுடைய மரணத்திற்கு நானே பொறுப்பு.

அண்மையில் தற்கொலை செய்து கொண்ட சினிமா நடிகை ஷோபா தமது கணவரான பாலு மகேந்திராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

இக்கடிதம் ஷோபாவினால் தான் எழுதப்பட்டதா என்பது பற்றி பொலிசார் இப்போது தீவிர விசாரணை செய்து வருகின்றனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஷோபா மகேந்திரா திருமணத்திற்கு முன்னர் ஷோபா மகேந்திராவுக்கு எழுதிய உணர்ச்சிகரமான கடிதங்களையும் பொலிசார் ஷோபாவின் அறையிலிருந்து கண்டெடுத்தனர். (இ)


# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் றோட்டறிக் கழகம்

“சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி”

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் “ஈழநாடு” பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் “ஈழநாடு” பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும்படி யாழ் றோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

றோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

.............................. ..............................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா.

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்..............................ஒப்பம்............

விலாசம்..............................................................


# சிவத்தமிழ்செல்வி தமிழ்நாடு பயணம்

(மாவிட்டபுரம்)

தமிழகத்தில் நடைபெறும் சமய மகாநாடொன்றில் தலைமைதாங்கி உரையாற்றும் பொருட்டு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இம்மாதம் 11-ம் திகதி தமிழகம் பயணமாகிறார்.

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் ஆதரவில் ஆரணி திருக்கயிலாய நாதர் ஆலயமண்டபத்தில் 3 தினங்கள் நடைபெறும் சைவ மகாநாட்டிலேயே இவர் கலந்து கொள்கிறார்.

இம்மாதம் 16-ம் திகதி ஆரம்பமாகும் இந்த மகாநாடு அன்று சைவ மகாநாடு என்றும் மறுநாள் 17-ம் திகதி சைவமங்கையர் மகாநாடு என்றும் 18-ம் திகதி சைவ இளைஞர் மகாநாடென்றும் மூன்று பிரிவுகளாக இடம் பெறுகிறது.

முதல்நாள் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியாரும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் 3 ம் நாள் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் இ. ம. பச்சையப்பனும் தலைமை தாங்கி உரையாற்றுவார்கள். [illegible] கொள்வதற்காகவும் பேரூர் [illegible] மதுரை ஆதீனங்களை தரிசிப்பதற்காகவும் மற்றும் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகவும் இம்மாதம் 11-ம் திகதி தமிழகம் செல்லும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இருவாரங்களின் பின்பு நாடு திரும்புவார்

தமிழகத்தில் நடைபெற்ற பல மகாநாடுகளில் முன்பு பிரதிநிதியாகக் கலந்து சொற்பொழிவாற்றியுள்ள இவர் மகாநாடொன்றுக்கு தலைமை தாங்குவது இதுவே முதல்தடவையாகும்.

இம்மகாநாட்டில் தமிழகத்தில் தலைசிறந்த சைவ சித்தாந்த பேராசிரியர்களது சொற்பொழிவுகள் இடம்பெறுவதுடன் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# கமண்டலர் சமூகத்தின் அபிவிருத்தி நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட கமண்டலர் சமூக வளர்ச்சிச் சங்க வருடாந்தக் கூட்டம் துன்னுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் திரு. ச. வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு மாணிக்கவாசகர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள கமண்டலர் சமூக மக்கள் வாழும் 16 குக் கிராமங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சங்கச் செயலாளர் திரு. ப. சந்தியாகப்பு குக்கிராமங்களின் தேவைகள், பஸ் பிரயாணிகளின் அவஸ்தை, பாதைகள் சீர்கேடு கல்வித்தேவைகள் ஆகியன பற்றிக் கூறியதுடன் பனம்பொருள் அபிவிருத்தி கடற்றொழில், கால் நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக் கூறினார்.

பேசாலை பங்குத் தந்தை வண. பிதா பா. தேவசகாயம் பேசாலைக் கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. பங்கிராஸ் பெர்னாண்டோ கிராம அபிவிருத்தி அதிகாரி. கால்நடை மருத்துவர் ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. மிக்கேல் குசையப்பு நன்றியுரை கூறினார். (ஈ)

# சமாதான நீதவான்

யாழ்ப்பாணம்

பாஷையூரைச் சேர்ந்த திரு. பீ. அமிர்தவாசகம் யாழ்ப்பாண மாவட்டத்திற்குச் சமாதான நீதவானாக, யாழ் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ் மாநகர ப. நோ. கூ. சங்க இயக்குநரான இவர் யாழ். நகர கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும் பாஷையூர் புனித அந்தோனி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் தேர்தலில்

# 146 கலைக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் போட்டி

## களத்தில் 40 முஸ்லிம்கள்: 16 பெண்கள்

சென்னை, மே 7

கலைக்கப்பட்ட தமிழக சட்டசபையின் 234 உறுப்பினர்களில் 146 பேர் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 63 பேரும் தி.மு.க.வைச் சேர்ந்த 38 பேரும் இந்திராகாங்கிரஸை சேர்ந்த 20 பேரும் அடங்குவர்.

இத் தேர்தலில் போட்டியிடும் 1029 வேட்பாளர்களில் 60 பேர் முஸ்லிம்கள். முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த 8 பேரும் இந்திராகாங்கிரஸை சேர்ந்த 5 பேரும் தி.மு.க.வைச் சேர்ந்த 4 பேரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 3 பேரும் ஜனதாவைச் சேர்ந்த 2 பேரும் இதில் அடங்குவர்.

18 பேர் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்.

### 16 பெண்கள்

இந்திராகாங்கிரசில் 6 பெண்களும் திமுகவில் மூன்று பெண்களும் அதிமுகவில் 2 பெண்களும் காந்தி காமராஜர் தேசிய காங்கிரஸில் ஒரு பெண்ணும் போட்டியிடுகின்றனர். 4 பெண்கள் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர். (இ)

## மணிப்பூருக்கு ரூபா 2 லட்சம் மானியம்

புதுடில்லி, மே 7

அண்மையில் மணிப்பூரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட இடங்களை சீர்செய்வதற்காக இந்தியப் பிரதமர் திருமதி காந்தி பிரதமரின் உதவி நிதியிலிருந்து 2 லட்சம் ரூபா மானியம் வழங்கியுள்ளார்.

## ஷாவுக்கு புற்று நோய்; மீண்டும் ஆஸ்பத்திரியில்

கெய்ரோ, மே 7

கெய்ரோவில் இருக்கும் ஈரானிய ஷா மீண்டும் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு கெய்ரோவில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குப் பின்னர் ஷா குணமானது தெரிந்ததே.

மீண்டும் இப்போது கெய்ரோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள ஈரானிய ஷாவைப் பார்வையிடுவதற்காக நியுயோர்க்கில் ஷாவுக்கு முன்பு சத்திர சிகிச்சையை மேற்கொண்ட வைத்தியநிபுணர் மைக்கல் டெபாக்கி கெய்ரோ வந்துள்ளார். (இ)

## பிணைமனு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கொலைச் சம்பவம் தொடர்பான 2வது சந்தேக நபர் பெர்னண்டோவின் பிணைமனு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, அரச சட்டத்தரணி, பதில் அளிப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறு கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி இம்மாதம் 12ம் தேதி விசாரணையை ஒத்திவைத்தார். (இ)

## ஜெர்மன் பயங்கரவாதப் பெண் பாரிஸ்ஹோட்டலில் கைது!

பாரிஸ், மே 7

மேற்கு ஜெர்மன் வங்கி முகாமையாளர் கொலை, வங்கிக் கொள்ளை தொடர்பாக நீண்ட நாட்களாகத் தேடப்பட்டு வந்த பயங்கரவாத இயக்கம் ஒன்றைச் சேர்ந்த இளம்பெண் ஒருவரை பாரிஸில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து பிரெஞ்சு பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

ஜெர்மன் பொலிசாரினால் தேடப்பட்டுவரும் 17 பயங்கரவாதிகளில் ஒருவரான செல்வி ஹொப்மன் என்ற பெண்ணே நேற்று கைது செய்யப்பட்டார்.

1977ம் ஆண்டு மேற்கு ஜெர்மனியில் வங்கி முகாமையாளரைக் கொலை செய்துவிட்டு பெரும் தொகைப் பணத்தை அங்கிருந்து கொள்ளையடித்துச் சென்ற கொள்ளைக்கோஷ்டியின் முக்கிய உறுப்பினர்களுள் செல்விஹொப்மனும் ஒருவராவார்.

பாரிஸில் உள்ள ஹோட்டலில் தமது தோழி ஒருவருடன் தங்கியிருந்த செல்வி ஹொப்மன், அங்கு சென்ற பொலிசாரைத் தடுத்து நிறுத்தியதுடன் பொலிசார் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் இதை அடுத்து அவர்கள் இருவரையும் கைதுசெய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

தேர்தல் கட்டுப்பணத்திற்காக

## தாயிடம் கத்தி முனையில் நகைகளை அபகரித்த இளைஞன்

கான்பூர், மே 7

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் கட்டுவதற்காக கிராமவாசி ஒருவர் தமது தாயின் நகைகளை அவரிடமிருந்து கத்தி முனையில் அபகரித்துக்கொண்டாராம்.

கான்பூர் - கோரயாவைச் சேர்ந்த பகவதி பிரசாத் என்ற இளைஞரே கத்திமுனையில் தமது தாயின் நகைகளை அபகரித்துக்கொண்டவராவார்.

கட்டுப்பணம் செலுத்த நகைகளை விற்றுப் பணம் பெறுவதற்காக நகைகளைத் தரா விடின் கத்தியால் குத்தப்போவதாக அந்த இளைஞன் பயமுறுத்தியதை அடுத்து தாயாரும் பயத்துடன் தமது வெள்ளி நகைகளை எடுத்துக் கொண்டு மகனுடன் சென்று சட்டத்தரணி ஒருவரைச் சந்தித்தாராம்.

சட்டத்தரணி கட்டுப்பணத்தையும் தமது கட்டணத்தையும் கேட்க நகைகள் அநியாய விலையில் விற்கப்பட்டதாம். (இ)

## இந்திராகாங்கிரஸிலிருந்து பஹுகுணா விலகலாம்

புதுடில்லி, மே 7

ஜனதாவிலிருந்து வெளியேறி இந்திராகாங்கிரஸில் சேர்ந்துகொண்ட முன்னாள் அமைச்சர் திரு எச். என். பஹுகுணா இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேறி அர்ஸ் காங்கிரஸில் சேர்ந்துகொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் கட்சியில் தாம் வகித்துவந்த பதவிகளிலிருந்து அவர் ராஜினாமா செய்துகொண்டது தெரிந்ததே.

இதேவேளையில் கலைக்கப்பட்ட சட்டசபைகளில் இவரது ஆதரவாளர்கள் 46 பேர் உறுப்பினர்களாக இருந்தனர் என்றும் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் 35 தொகுதிகள் வேண்டும் என்று திரு. பஹுகுணா கேட்டபோது 9 தொகுதிகள் மட்டுமே அவரது ஆதரவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 47 அதிருப்தியடைந்த வேட்பாளர்

சென்னை, மே 7

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் அநேக கட்சிகளின் உத்தியோகபூர்வ வேட்பாளர்களை எதிர்த்து அதே கட்சிகளைச் சேர்ந்த அதிருப்தி அடைந்த வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 47 அதிருப்தி வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்திராகாங்கிரஸை சேர்ந்த 24 பேரும், அ. தி. மு. க. வைச் சேர்ந்த 15 பேரும், தி. மு. க. வைச் சேர்ந்த 3 பேரும் காந்தி காமராஜர் காங்கிரஸைச் சேர்ந்த 3 பேரும், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிய கம்யூனிஸ்ட், தமிழ்நாடு போர்வட்புளக், இந்திய போர்வட்புளக் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தலா ஒருவருமே அதிருப்தியடைந்த வேட்பாளராவர். (இ)

## புழுதிக் காற்றினால் 3சிறுவர்கள் பலி

புதுடில்லி, மே 7

உத்தரப் பிரதேசத்தில் நேற்று வீசிய மோசமான புழுதிக் காற்றினால் அடித்துச்செல்லப்பட்ட மூன்று குழந்தைகள் கிணறு ஒன்றில் விழுந்து மரணமானார்களென அறிவிக்கப்பட்டுள்ளது (இ)



# வல்லதே வாழும்!

வல்லவன் வாழ்வான் என்பது பழமொழி. பயிர் பச்சை, செடி, கொடிகளிலும் அப்படித் தான். வல்லதே வாழும். பசளை, உரங்கள் பயிர்களைச் செழிக்கச் செய்தாலும், தேவையற்ற களைகள், புதர்ச் செடிகளும் அவற்றின் சாரத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும். சிறப்பான களைக் கட்டுப்பாடு இதனால் தான் அவசியமாகிறது. விளைச்சலைக் கூட்டி இலாபத்தை பெருக்க இது மிக முக்கியம்.

## ஹெடோனல் எம் 60%

60% எம். சி. பீ ஏ. அமீன் உப்புகள் கொண்டது. அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் அது அறவே அழிக்கும்.

ஹெடோனல் எம் 60% நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகள், புதர்ச் செடிகளை, மிகச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் கட்டுப்படுத்தும் தரமான களைநாசினி. அது உங்கள் நெற் பயிரைப் பாதுகாப்பதுடன் இலாபத்தையும் பெருக்குவது நிச்சயம்.




BAYER

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர் :

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி : 93563, 96331-6

100 மில்லி லீட்டர் ரூபா 10/- 200 மில்லி லீட்டர் ரூபா 17/50

450 மில்லி லீட்டர் ரூபா 36/50 2 லீட்டர் ரூபா 145/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (கன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சாவித்திரி
எஸ்.எஸ்.ஆர்.-வித்யா
கைகொடுத்த
தெய்வம்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
சிவாஜி சரோஜாதேவி - எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7898
தினசரி 4 காட்சிகள்
மரகதம் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-ராஜேஷ்-... ஜெயச்சந்திரன் ... V. R. ...
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
டெலிபோன்: 463
தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7-15 10-30
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
சந்திரசேகர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

SANTHI JAFFNA Phone 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
ஜனத்திரள் நிறைந்த 2வது கடைசிவாரம்!
பட்டைக்கோல் நெப்போலிய மன்னன் காலத்தைப் பின்னணியாகக் கொண்ட இப்படம் குழந்தைகள் முதல் அனைவரும் பார்த்து மகிழவேண்டிய ஒப்பற்ற ஹாஸ்ய சித்திரம் விறுவிறுப்புமிக்க வாள்சண்டைகள் வயிறுகுலுங்கச் சிரிக்கவைக்கும் கேலிக்கைகள் யாவும் கண்கவர் வண்ணத்தில்
THE LOVE AND TIMES OF
SCARAMOUCHE

RAJAH (JAFFNA)
Daily at 10-30, 4-30, 7-15, & 9-45
Robert Redford - Dustin Hossman in
"ALL THE PRESIDENT'SMEN"
(Color)
9-5-80 முதல் திருடன்

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
அவள் ஒரு தொடர்கதை
Coming soon
The Living Desert

ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-00, 4-00, 7-00 & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
★ கமலஹாசன் (இருவேடங்களில்)
★ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரிக்கற்றுகளை முற்பதிவு செய்து கொள்ளுங்கள்.




உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெற்ற மகா கும்பாபிஷேக விழாவில் பிரதம சிவாசாரியர், திருவாளர்கள் செ. சிவலிங்கம், மு. வைத்தியலிங்கம் ஆகியோருக்கு எஜமான் அபிஷேகம் நிகழ்த்துவதையும், தலைமைதாங்கிய பிரதம சிவாசாரியர் சிவாசாரியமணி சிவஸ்ரீ. வை. சபாரத்தினக்குருக்கள் நின்றுகொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 26-ந்திகதி (8-5-80) வியாழக்கிழமை

**மேடம்:** குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும், கல்வித்துறையில் ஆர்வம் பிறக்கும், தாய்வழி ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** மக்களால் மகிழ்ச்சி, செல்வாக்குப் பெருகும், திறமைக்கு முதலிடம் உண்டு, முன்னேற்றமான நாள்.

**மிதுனம்:** ஏமாற்றத்திற்கு இடமுண்டு, சூழ்நிலை விழிக்கப்படும், சத்துருக்களால் கவலை அதிகரிக்கும், பிரயாணத்தைப் பின்போடவும்.

**கடகம்:** உவகைதரும் சம்பவங்கள் இடம் பெறும், உறவினர் உங்களை உற்சாகப்படுத்துவார்கள், குடும்பத்தவர்களின் வாழ்க்கையில் இனிமை தவழும், சிலர் வாழ்க்கையில் காதலும் அரும்பும்.

**சிங்கம்:** வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும், தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம், திடீர் பிரயாணத்திற்கும் இடமுண்டு, உடல்நலம் பாதிக்கப்படக் கூடும், சுகாதாரம் வேண்டும்.

**கன்னி:** இதயத்திற்கு இதந்தரும் செய்தி ஒன்று கிடைக்கலாம், புண்ணிய கருமங்களில் விருப்பம் மேலிடும், ஸ்தலயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம், செலவுகள் கூடுதலாக இருக்கும்.

**துலாம்:** சுய்தொழில் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும், பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு, போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும், விளையாட்டு வீரர்கள் முதலிடத்தைப் பெறுவர்.

**விருச்சிகம்:** புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும், பூமியால் முன்னேற்றமுண்டு.

**தனுசு:** நடையில் தயக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும், சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, உடல்நலன் சிறிது பாதிக்கப்படலாம்.

**மகரம்:** மனப் போராட்டம் அதிகரிக்கும், உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கலாம், இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம், பிள்ளை ஒன்றின் உடல் நலன் பாதிக்கப்படலாம், பொறுமை நன்று.

**கும்பம்:** எழுத்தாளருக்கு இன்று எழுச்சிமிக்க தினம், புதிய படைப்புகளுக்கான கருவூலம் கிடைக்கலாம், சிலர் வாழ்க்கையில் சன்மானம் கிடைப்பதற்கும் இடமுண்டு.

**மீனம்:** அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரலாம், அன்னியர்களுடன் பழகுவதில் அதிக அவதானம் செலுத்த வேண்டும், எதிலும் மனதை அதிகம் அலட்டிக்கொள்ளாதிருப்பது விரும்பத்தக்கது, தெய்வ நம்பிக்கை வேண்டும்.

சோதிடக் கலாநிதி
இருமலை
க. வேலுப்பிள்ளை


வெலிங்டன் வெளிப்பாணம்
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
... விடுமுறையின் ...


யாழ்- மத்தியகல்லூரி--காங். சிமெந்து

## கிரிக்கட்போட்டி வெற்றி தோல்வியில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கக் கோஷ்டிக்கும் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய யாழ் கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கக் கோஷ்டியினர் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றனர். இக்கோஷ்டியில் விளையாடிய திருவாளர்கள் மகேந்திரன், கே எஸ் ஏ சேவியர், வண்டக்கோன ஆகியோர் முறையே 24, 23, 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

இக்கோஷ்டியினர் தமது இரண்டாவது ஆட்டத்தில் 5 விக்கட்டுகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டனர். இக்கோஷ்டியில் விளையாடிய திரு. வீ. கெங்காதரன் 56 ஓட்டங்களைப் பெற்றார்.

இக்கோஷ்டியை எதிர்த்துப் பந்து வீசிய காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனக் கோஷ்டியைச் சேர்ந்த திரு. எம். ஏ. செல்வராசா 25 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

சிமெந்துக் கூட்டுத்தாபனக் கோஷ்டி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 7 விக்கட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய திரு. பி. நாகராசா 47 ஓட்டங்களையும், திரு. சிவராசா ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

இக்கோஷ்டியை எதிர்த்துப் பந்து வீசிய மத்தியஸ்தர் கோஷ்டியைச் சேர்ந்த திரு. சேவியர் 8 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளையும் திரு. எம். டி. தம்பிராசா 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். (ச)

## தற்கொலை

(நெல்லியடி)

வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம் வர்த்தகர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பொலிகண்டியில் நிகழ்ந்துள்ளது.

நெல்லியடியைச் சேர்ந்த நா. ஜெயச்சந்திரன் (37) என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இவரது மரணவிசாரணை பருத்தித்துறை பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்ற போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு வீரசேகரா சாட்சிகளை ஆஜர் செய்தார். மரண விசாரணையின் போது காலஞ்சென்றவரினால் தாய்க்கும் சகோதரருக்கும் எழுதப்பட்ட கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. மரணவிசாரணையில் சாட்சியமளித்த திருமதி ஜெயதேவி காலஞ்சென்றவர் சின்ன விஷயங்களையெல்லாம் பெரிதாக யோசனை செய்யும் இயல்புடையவர் என்று தெரிவித்தார். சகோதரர்கள் தமது சாட்சியத்தில் மரணத்திற்கான காரணம் என்னவென்று தெரியாது எனக் கூறினர்கள். விசாரணை முடிவில் பதில் நீதவான் தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி சிறந்த இயந்திரமூலம்
போட்டோஸ்ரட்
பிரதிகள் செய்து பெற்றுக் கொள்ள
பாரத் சென்ரர்
178, நவீன சந்தை (புதிய கட்டிடம் உள்பகுதி)
யாழ்ப்பாணம்.
போன்: 8265

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## ஈரான் தூதரகத்தில் மேலும் 2 சடலம்

லண்டன், மே 7
லண்டனில் ஈரான் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டிருந்தவர்களை மீட்கும்போது பலியான பயங்கரவாதிகளின் தொகை 5ஆக உயர்ந்துள்ளது.

தூதரகக் கட்டிடத்துள் இருந்து பயங்கரவாதியின் சடலமொன்றும் பணயக் கைதியின் சடலம் ஒன்றும் இன்று கண்டெடுக்கப்பட்டது. (கு)

NEW CAMBRIDGE
திருநெல்வேலிச்சந்தி, மேல்மாடி
யாழ்ப்பாணம்.
ஆரம்பம் 14-5-80
● RADIO & ELECTRONIC WITH PRACTICAL
● SHORTHAND & TYPING
காலை, மாலை, சனி, ஞாயிறு வகுப்புக்கள்.
● I. B. K. I. A. A. LONDON EXAM.
● ADVANCED & SPOKEN ENGLISH.
பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.
மேலதிக விபரங்கட்கு:
V. M. PACKKIYANATHAN

# போர்த்துக்கல் விமானம் ஆயுதமுனையில் கடத்தல்

மட்றிட், மே. 7
83பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த போர்த்துக்கல் விமானத்தைக் கடத்திய துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர் விமானத்தை மட்றிட் விமான நிலையத்தில் பலவந்தமாக இறக்கியுள்ளார்.

விமானத்தை விடுவிப்பதற்குப் பெருந்தொகைப் பணத்தைத் தமக்குத் தருமாறு அந்நபர் நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்றிட்டில் 60 பெண்களையும் குழந்தைகளையும் விடுவித்த துப்பாக்கி ஏந்திய இளைஞன் விமானத்தில் 11 விமானிகளையும் மற்றும் சில பிரயாணிகளையும் பணயமாக வைத்துள்ளார்.

போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பனிலிருந்து தென்போர்த்துக்கல் நகரமான பாரோவுக்கு உள்ளூர் சேவையை மேற்கொண்ட "போயிங்-727" விமானமே கடத்தப்பட்டுள்ளது. (இ)

## சரவணைக் கொள்ளை:

# நான்காவது சந்தேகநபர் யாழ்நகரில் வைத்துக் கைது

(யாழ்ப்பாணம்)
சரவணை கொள்ளை தொடர்பாக பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த நான்காவது சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர்.

இக்கொள்ளை தொடர்பாக பொலிஸார் ஏற்கனவே 3 சந்தேகநபர்களை கைதுசெய்திருந்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த நான்காவது சந்தேக நபரான அபூபக்கர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் லால்பெரேராவினால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்விசாரணையைத் தொடர்ந்து ஆனைக்கோட்டையில் கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படும், "கஸட்" றேடியோ ஒன்றையும், பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ் ரயில் நிலையத்திலிருந்து சி. என். 8615 ஒஸ்ரின் ஏ 40 காரை கடத்திச் சென்று கார் சாரதியை டிக்கியில் போட்டுவிட்டு, சரவணைக்கு சென்று வயோதிப தம்பதிகளை துப்பாக்கிமுனையில்பயமுறுத்தி 1500 ரூபா பெறுமதியான காப்போன்றை கொள்ளையடித்தது சம்பந்தமாகவே, நான்காவது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (கொ-ஜ)

## ஜனாதிபதி கமிஷனில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பிரதமராக இருந்த நாட்டு மக்களை அவதூறு செய்யும் செயலாகவே இந்நடவடிக்கை அமையும்

"நாட்டின் எந்தச் சட்டத்திற்கும் முரணாக நான் நடந்திருந்தால் எந்த நீதிமன்றத்தில் முன்னாவது என்னை நிறுத்தினால் நான் அதனை ஏற்கதயாராகவே இருக்கிறேன்.

"எந்தச் சூழ்நிலையிலும் இந்தக் கமிஷன் மூலம் நியாயமான விசாரணை நடாத்தவும், எனது நிலையைத் தெளிவுபடுத்த நியாயமான சந்தர்ப்பம் கிடைப்பது சாத்தியமில்லை என்று எண்ணுவதால் நான் இதில் தொடர்ந்து கலந்துகொள்ள விரும்பவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா தமது அறிக்கையை வாசித்ததைத் தொடர்ந்து கமிஷன் விசாரணை மே மாதம் 20ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

விசாரணையைப் பார்வையிட முன்னாள் அமைச்சர்கள் ரி. பி. இலங்கரத்தின, மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். திருமதி பண்டாரநாயக்காவின் சார்பில் திரு. எச். எல். டி. சில்வா ஆஜரானார். (ம:கு)

அச்சுக்கோப்பாளர்கள்
தேவை
யாழ். நகரிலுள்ள ஒரு பிரபல அச்சகத்திற்கு தமிழ் அச்சுக்கோப்பாளர்கள் உடன் தேவை. 10-5-80 திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 5684,
மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம்.
(5684)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No CE/8948/ 78. The Eelanaadu, Post Box No 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

## இளைஞர் பேரவையின் காலக்கெடு:

# கூட்டணி பாராளுமன்றகுழு பேச்சுவார்த்தை நடத்தும்

## கொழும்பில் கூடிய செயற்குழு முடிவு

(கொழும்பு)
தமிழர் விடுதலைக்கூட்டணி முழுமையான விடுதலை இயக்கமாக மாறவேண்டுமென்ற இளைஞர் பேரவையின் தீர்மானம் தொடர்பாக கூட்டணிப் பாராளுமன்றக்குழு இப்மாதம் 18ம் திகதி பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது!

நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு பேச்சுவார்த்தை நடாத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் வாசஸ்தலத்தில் நடைபெற்ற இச் செயற்குழுக்கூட்டத்தில் அண்மையில் தற்காலிகமாக வெளியேற்றப்பட்ட திரு. ஈழவேந்தனும் கலந்து கொண்டார். அவர் வெளியேற்றப்பட்டது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்பு அவருக்குக் கிடைக்காதவிதயடுத்தே அவர் கலந்து கொண்டார்.

நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

"மத்திய செயற்குழு இம்மாதம் 24ம் திகதி கல்முனையில் கூடுதல். அக் கூட்டத்தில் ஜூன் மாதத்தில் பொதுச் சபையைக் கூட்ட ஆலோசித்தல்.

ஒழுங்கு நடவடிக்கைக்குழுவில் மேலும் 5 பேரைச் சேர்த்துக்கொள்வதென்றும் இக்குழுவில் திரு டி. வி. சந்தையா (கல்முனை), திரு. பி. தியாகராசா (திருமலை), திரு. பெபமாலை (மன்னார்), கே. குமாரசாமி, ஏ. நடராசா (யாழ் நகர்) ஆகியோரைச் சேர்ப்பது.

"தற்காலிகமாக வெளியேற்றப்பட்ட திரு. ஈழவேந்தன், கோவைமகேசன் ஆகியோர் மீதான விவகாரங்கள் தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் மூவர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களை ஆலோசனை நடத்தி 24ம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தல்.

நேற்றைய கூட்டம் முடிந்த பின்னர் திரு. அமிர்தலிங்கம் பத்திரிகைநிருபர்கள் மத்தியில் பேசுகையில் "திரு ஈழவேந்தன் மனம்விட்டுப்பேசியதாகவும், இருக்கிடையே சுமுகமான உறவு ஏற்படும்" என்று தான் நம்புவதாகவும் கூறினார். (ம-கு)

# 'கனகர்' கூட்டணியிலிருந்து ராஜினாமா செய்யவில்லை

## தேர்தல் ஆணையாளரிடம் 'அமிர்' விளக்கம்

(கொழும்பு)
"காலஞ்சென்ற பொத்துவில் இரண்டாவது உறுப்பினர் திரு. எம். கனகரத்தினம் தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து ராஜினாமாச் செய்யவுமில்லை, வெளியேற்றப்படவுமில்லை. எனவே அவரது இடம் கூட்டணிக்கே வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுள்ளார்.

பொத்துவில் நியமனம் தொடர்பாக திரு. அமிர்தலிங்கமும், திரு. சிவசிதம்பரமும் நேற்று தேர்தல் ஆணையாளரை நேரில் சந்தித்து பேச்சு நடத்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கனகரத்தினம் அரசில் சேர்ந்தபோது தனது தொகுதியபிவிருத்தி கருதியே தான் அரசாங்கபாராளுமன்றக் குழுவில் சேர்வதாகவே தெரிவித்தார் என சுட்டிக்காட்டியதை யடுத்தே தேர்தல் ஆணையாளர் சட்ட ஆலோசனை பெற்ற பின்னர் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். (ம-கு)

(யாழ்ப்பாணம்)
இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலய கொடியேற்ற விழா இன்று வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

மாலை திருமதி வசந்தாவைத்தியநாதன் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார். (கு)

## டிட்டோவின் இறுதிச்சடங்கு இன்று:

# பெருந்தொகையான உலகத் தலைவர்கள் கலந்துகொள்வர்

(பெல்கிரெட்)
இரண்டாம் உலக யுத்தத்தின் மாபெரும் வீரரும் மறைந்த யூகோஸ்லாவிய அதிபருமான மார்ஷல் டிட்டோவின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக என்றுமில்லாதவாறு உலகத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடியுள்ளனர்.

சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ் சீனப் பிரதமர் திரு. குவாகுவாபெங், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட்தட்சர் உட்பட 19 ஜனாதிபதிகள், 12 பிரதமர்கள், 3மன்னர்கள் இன்று நடைபெறும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வார்கள்.

பெல்கிரெட்டிலுள்ளபாராளுமன்ற கட்டிடத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் தலைவரின் பூதவுடல் இன்று வெளியே கொண்டுவரப்பட்டு, பீரங்கிதாங்கிய வண்டியில் ஏற்றப்பட்டு பெல்கிரெட்டிலுள்ள மூன்றாவது வாசல்ஸ்தலத்தில் உள்ள ரோசமலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

என்றுமில்லாதவாறு பெருந்தொகையாகக் கூடியுள்ள தலைவர்கள் இன்றுள்ள சர்வதேசநெருக்கடி தொடர்பாக கூடிஆராயும் வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது. (கு)

### சமாதான...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
யார் சனசமூகநிலையதனாதிகாரியாகவும், பாசையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் [illegible] குழு ஆகியவற்றின் செயலாளராகவும் [illegible] கடமையாற்றியவருர். (க-அ)

மரண அறிவித்தல்
கனகசபை செந்தூர்ராசா
(பெருந்தெருக்கள் திணைக்களம் வவுனியா)
இவர் காலஞ்சென்ற சித்திரவித்தியாதரிசி எஸ். ஆர் கனகசபையின் புத்திரரும் திருமதி இந்திராணியின் அன்புக்கணவரும் (சங்கானை ப.நோ. கூ. சங்கம்) பிரதீப், சதீப் ஆகியோரின் அன்புத் தந்தையும், குககுமாரராஜா (விரிவுரையாளர் கோ. அ. ம. க.) திருமதி இராசேஸ்வரி சம்பந்தன் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மளம்ஹேட் கோப்பாய் தெற்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
5703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org